உ

சிதம்பரம்.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்
இராமலிங்கப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய
திருவருட்பா,

இஃது

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசைபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்திரபானு௵.

கணபதிதுணை.

திருவருட்பா.

திருச்சிற்றம்பலம்.

அருட்சோதித்தெய்வமெனையாண்டுகொண்டதெய்வ
ம், அம்பலத்தேயாடுகின்றஆனந்தத்தெய்வம்
பொருட்சாருமறைகளெலாம்போற்றுகின்றதெய்வ
ம், போதாந்ததெய்வமுயர்நாதாந்ததெய்வம்
இருட்பாடுநீக்கியொளிர் ஈந்தருளுந்தெய்வம், எ
ண்ணியநானெண்ணியவாறெனக்கருளுந்தெய்வ
தெருட்பாடலுவந்தெனையுஞ்சிவமாக்குந்தெய்வ
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வ

எல்லாஞ்செய்வல்லதெய்வமெங்குநிறைதெய்வம்
என்னுயிரிற்கலந்தெனக்கேயின்பநல்குந்தெய்வ
நல்லார்க்குநல்லதெய்வம்நடுவானதெய்வம்
நற்சபையிலாடுகின்றநடராஜதெய்வம்
கல்லார்க்குங்கற்றவர்க்குங்களிப்பருளுந்தெய்வம்
காரணமாந்தெய்வமருட்பூரணமாந்தெய்வம்
செல்லாதநிலைகளெல்லாஞ்செல்லுகின்றதெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வ

தாயாகித்தந்தையுமாய்த்தாங்குகின்றதெய்வம்
தன்னைநிகரில்லாததனித்தலைமைத்தெய்வம்
வாயாரவாழ்த்துகின்றோர்மனத்தமர்ந்ததெய்வம்
மலரடிஎன்சென்னிமிசைவைத்தபெருந்தெய்வம்
காயாதுகனியாகிக்கலந்தினிக்குந்தெய்வம்
கருணைநிதித்தெய்வமுற்றுங்காட்டுவிக்குந்தெய்வ
ம், சேயாகவெனைவளர்க்குந்தெய்வமகாதெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்.

என்னிதயகமலத்தேயிருந்தருளுந்தெய்வம்
என்னிரண்டுகண்மணிக்குளிலங்குகின்றதெய்வம்
பொன்னடிஎன்சென்னியிலே பொருந்தவைத்ததெ
ய்வம், பொய்யாததெய்வமிடர்செய்யாததெய்வம்
அன்னியமல்லாத்தெய்வமதுவானதெய்வம்
அவ்வறிவுக்கறியாமெய்யன்பானதெய்வம், செ
ன்னிலையிற்செம்பொருளாய்த் திகழ்கின்றதெய்வம், சி
ற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம். ( )

எண்ணியவா விளையாடென்றெனையளித்ததெய்வம்
எல்லாஞ்செய்வல்லசித்தெனக்கீந்ததெய்வம்
நண்ணியபொன்னம்பலத்தே நடம்புரியுந்தெய்வம்
நானாகித்தானாகிநண்ணுகின்றதெய்வம்
பண்ணியவென்பூசையிலே பலித்தபெருந்தெய்வம்
பாடுகின்றமறைமுடியிலாடுகின்றதெய்வம்

திருவருட்பா,

இன்பமென்றெனை யுலகஞ் செப்ப வைத்த தெய்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.
இச்சையெலாமெனக் களித்தே எனைக்கலந்த தெய்வ
இறந்தவர்களனைவரையு மெழுப்புகின்ற தெய்வம்
எச்சமயத் தெய்வமுந்தா னெனநிறைந்த தெய்வம்
எல்லாஞ்செய் வல்லதெய்வமென ஆகுலதெய்வம்
பிச்சகற்றும் பெருந்தெய்வஞ் சிவகாமியெனுமோர்
பெண்கொண்ட தெய்வ மெங்குங் கண்கண்ட தெ
செச்சைமலரென் விளங்குந் திருமேனித் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்
சாகாதவரமெனக்கே தந்த தனித் தெய்வம்
சன்மார்க்க சபையிலெனைத் தனிக்க வைத்த தெய்
மாகாதவரமெனக்கு வாய்த்த வொரு தெய்வம்
மாதவராதியரெல்லாம் வாழ்த்துகின்ற தெய்வம்
ஏகாதி நிலைதன்மே லெனையேற்றுந் தெய்வம்
என்னுடைய குருவென்னுளத்தே யிலிக்கின்ற தெய
தேகாதியுலகமெலாந் செயப்பணிக்க தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்
தாண்டாக மெய்விளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
அரியதெய்வ மரியதெய்வம் பெரிய பெருந்தெய்வ
மாண்டாரை யெழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியையோர் வலத்தில் வைத்த தெய்வம்

ஆண்டாரையாண்டதெய்வமருட்சோதித்தெய்வம்
ஆகமவேதாதியெலா மறிவரிதாந்தெய்வம்
ஈண்டாதவெளியிலவர் ஈண்டாததெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வ (௧)

எவ்வகைச்சாத்திரங்களுஞ்செயினுமெய்தரிதாந்தெய்வம்
எனக்கெளிதிற்கிடைத்தென்மனமிடங்கொண்டெழு
அவ்வகைச்சாத்தான்தெய்வமதற்பாலாந்தெய்வம்
அப்பாலும்பெருவெளிக்கேயப்பாலாந்தெய்வம்
ஒவ்வகைத்தேயொளியாகி யோங்குகின்றதெய்வம்
ஒன்றானதெய்வமிகநன்றானதெய்வம்
செவ்வகைத்தென்றிருந்தெல்லாஞ் சேர்பெரியதெய்வ
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வ (௨)

சத்தியமாத்தனித்தெய்வந்தடையறியாத்தெய்வம்
சந்ததங்களெல்லாம்விளங்கத்தானோங்குதெய்வம்
நித்தியநன்மயமாகிநின்றதெய்வமெல்லா
நிலைகளுந்தன்னருள்வெளியில்நிலைக்கவைத்ததெ
பத்திவலைப்பாடுகின்றதெய்வமெனக்கெல்லாம்
பரிசளித்தருளியாகடகத்தில்வைத்ததெய்வம்
சித்தியெலாந்தருந்தெய்வஞ்சித்தாந்ததெய்வம்
சிற்சபையில்விளங்குகின்ற தெய்வமதேதெய்வ (௩)

திருவருட்பாசரங்கள்.

முற்றிற்று.

உ

ஆனந்தக்களிப்பு,

சோதியுட்சோதியுட்சோதி சுத்த
சோதிவச்சோதி சோதியுட்சோதி
சோதியுட்சோதியுட் சோதி
சிவமேபொருளென்றுதேற்றி என்னைச்
சிவவெளிக்கேறுஞ்சிகரத்திலேற்றிச்
சிவமாக்கிக்கொண்டதுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௧)
வித்தெல்லாமென்றென்றுநாட்டி அதில்
விளைவுபலபலவென்றுகாட்டிச்
சித்தெல்லாந்தந்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௨)
சொலவருந்தவந்தங்களாறும் ஒரு
சொல்லாலேயாமென்றசொல்லாலேயீறும்
செல்வங்கொடுத்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௩)
தக்கோலளவெனச்சோதி சுத்த
சமரசசத்தியசன்மார்க்கநீதி
செங்கோலளித்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௪)
ஆயத்தைநீக்கிவளர்த்தே சற்றும்
அசையாமலசியாமலடியேனுளத்தே

நிடத்தைவைத்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௫)

மெய்யென்றுசன்மார்க்கமேநான் என்றும்
விளங்கப்படைப்பாயிமெய்த்தொழில்நீதான்
செய்யென்றுவைத்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௬)

என்பால்வருபவர்க்கின்றே அருள்
ஈகின்றேனீகின்றேனீகின்றேனென்றே
தென்பாலிருந்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௭)

அரியத்தலமூன்றின்மேலே சுத்த
அரியப்பதியிலதுவைதருமேலே
தெரியத்தெரிவதுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௮)

பலாதூக்கிக்காட்டியகாலே ஆதி
பலாயிவர்க்கப்பாலப்பாலென்றுமேலே
திரைதூக்கிக்காட்டுதல்பாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௯)

தற்பரமேவடிவாகி அதீ
தன்னைக்கடந்ததனியுருவாகிச்
சிதம்பரத்துள்ளதுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰)

ஆநந்தக்களிப்பு.

நவவெளிநால்வகையாதி ஒரு
நடுவெளிக்குள்ளேநடத்தியநிதிச்
சிவவெளியாமிதுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௧௧)
மேருவெற்புச்சியின்பாலே நின்று
விளங்குமோதம்பத்தின்மேலுக்குமேலே
சேருமோர்மேடைமேற்பாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰௨)
ஆரணவீதிக்கடையும் அந்த
ஆகமவீதிக்களாந்தகடையுஞ்
சேரநடுக்கடைபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடைச்சோதி சோதி (௰௩)
பாடன்மறைகளோர்கோடி அருட்
பாதவுருவசொருபங்கள்பாடி
தேடவிருந்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰௪)
நீடுசிவாகமங்கோடி அருள்
நேருறப்பாடியுமாடியுமோடித்
தேடவிருந்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰௫)

ஆநந்தக்களிப்பு
முற்றிற்று.